**இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 1981 இன் 74 ஆம் இலக்க இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிரித்து, இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்கள் மூலம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்

மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக ்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | குறித்த நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிராத காரணத்தினால் ரூபா 156,516,853 கியரமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய ஏற்பட்ட மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரையிலும் மோட்டார் வாகன மதிப்பீட்டிற்காக குறித்த மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் வருகை தந்துள்ளதுடன் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. மரத்தாலான பொருட்கள் அலுவலக உபகரணங்களின் மீள்மதிப்பீடு தொடர்பில் அனைத்து தகவல்களும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் மதிப்பீட்டு பணி ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சனாதிபதி செயலகத்தின் 2019 திசெம்பர் மாதத்தில் வெகுமதியாக கிடைத்திருந்த 02 மோட்டார் வாகனங்களின் உரித்தினை மாற்றி குறித்த பெறுமதியை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் தாமதமாகியுள்ளதுடன் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு 2022.03.14 ஆந் திகதி பதிவுக் கடித்தின் மூலம் வாகனங்களின் உரித்தினை மாற்றுவதற்குரிய தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. | வாகன மதிப்பீட்டினை மதிப்பீடு செய்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் இல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றின் பிரகாரம் பெறுமதி | தொடர்படைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- | --- |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 79,710,032 | 79,494,536 | 235,462 | இந்த வேறுபாட்டினை இணக்கம் செய்வதற்காக | மரப் பொருட்கள் தொடர்பில் நிலையான |

| | | | |
|---|---|---|---|
| | | விரிவான தகவல்கள்அரச கணக்காய்வு பிரிவிற்கு கிடைக்கவுள்ளது. அதன் பின்னர் பதில் வழங்கப்படவுள்ளது. | சொத்துக்கள் பதிவேடு முறையாக பேணப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2016 மார்ச் 01 ஆந் திகதிய 2016/4 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | (i) | தன்னியக்க நிதி பாடநெறிகளின் வருமானம் மற்றும் செலவினம் பூச்சியமாக வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய தன்னியக்க நிதி பாடநெறிகள் 04 இன் ரூபா 4,203,037 ஆன நட்டமும் 05 பாடநெறிகளின் ரூபா 7,908,474 ஆன இலாபமும் மீளாய்வண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் சீராக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கொரோனா தொற்றுநோயின் அடிப்படையில் சில பாடநெறிகளில் மதிப்பிடப்பட்ட வருமானம் திட்டமிட்டவாறு கிடைத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | | (ii) | பல்கலைக்கழகத்தினால் தன்னியக்க நிதி பாடநெறிகளுக்காக 2021 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தின் 10 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையான அளவில் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியமொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை அதற்கமைய ஆண்டிற்கான | பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியமொன்றை தாபித்தல் இதுவரை இடம்பெற்றிராமையால் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மஹோபாத்திய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியமொன்றை தாபித்த பின்னர் அதற்காக ஒதுக்கப்படும் பணம் குறித்த நிதியத்திற்கு செலவு | சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 4,935,788 ஆன தொகை உள்ளடங்கலாக ரூபா 6,378,992 கூட்டுத்தொகை மஹோபாத்தியாய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 751 | மொழி ஆற்றல் அபிவிருத்தி நிலையமொன்றிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 9,361,532 கிரயமான பொருட்கள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பொருட் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2016 நவம்பர் 30 ஆந் திகதிய HE/UD/03/04/BPU /02(III) ஆம் இலக்க உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் 3 ஆம் பந்தி | மேலதிக நிதியேற்பாட்டினை வழங்காதிருக்கும் அடிப்படையில் மற்றும் தன்னார்வ விரிவுரையாளர்களின் சேவையை பெற்றுக் கொள்ளும் அடிப்படையிலும் மொழித் திறன் அபிவிருத்தி கற்கைகள் பிரிவொன்றினை நிறுவுவதற்கு அமைச்சரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் வெளிவாரி விரிவுரையாளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு ரூபா 7,939,227 ஆன படிகள் மற்றும் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் பயிலுனர் பேராசிரியர்கள் நால்வர் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கு ரூபா 27,060,714 ஆன சம்பளம் | தன்னார் அடிப்படையில் கல்வி பிரிவொன்றினை தாபித்திருந்த போதிலும் பின்னர் பாடநெறியை அபிவிருத்தி செய்தல் மற்றும் பட்டப்படிப்பிற்குரிய பாடங்களாக பாட விதானம் மேம்படுத்தப்பட்ட காரணங்களின் அடிப்படையில் பயிலுனர் விரிவுரையாளர் பதவிகளுக்காக ஆசிரியர்களை இணைத்துக் கொண்டுள்ளமையை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் 4 பேராசிரியர் பதவிகளை அங்கீகரித்தது கல்விசார் பாடநெறிகள் விரிவடைந்தமை மற்றும் அந்த விடயங்களுக்குரிய பாடநெறிகள் விரிவடைந்து கற்பிக்கும் மணித்தியாலங்களும் அதிகரித்தமை ஆகும். | குறித்த அங்கீ காரத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும் |

மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 47,275,438 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,026,815 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 57,302,253 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீண்டெழும் செலவினங்களுக்கான அரச நன்கொடைகள், ஈட்டப்பட்ட வெளிவாரி செயற்திட்ட வருமானங்கள் மற்றும் ஏனைய வருமானங்கள் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உரிய முறையில் சந்தர்ப்பம் இனங்காணப்படாது 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,349,525 கிரயமான விடைத்தாள் பத்திர புத்தக இருப்பொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எஞ்சியிருந்தது. | மதிப்பாய்விற்கமைய காலாவதியான மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருள் இருப்புக்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளதுடன் கைத்தவிர்ப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. பரீட்சைகளுக்காக அவசியமான விடைத்தாள்கள் குறித்த பரீட்சைகள் இடம்பெற்ற தொற்றுநோய் நிலைமை காரணமாக எதிர்பார்த்தவாறு இடம்பெறாமை மற்றும் இணையத்தள வழி மூலம் இடம்பெற்றமையால் விடைத்தாள் புத்தகங்களின் பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | தேவையை உரிய முறையில் இனங்கண்டு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தற்போது நடாத்திச் செல்லப்படும் 12 பாடநெறிகளின் பாடவிதானங்களை திருத்தியமைக்காது 03 | 2022 ஆம் ஆண்டு முதல் புதிய 15 பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது | பாடவிதானத்தை உரிய காலங்களில் திருத்தியமைக்க வேண்டியதுடன் புதிய |

| | | |
|---|---|---|
| வருடங்கள் கடந்திருந்ததுடன் புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டுள்ளன. | பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் தொடர்பில் முகாமைத்துவத் தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

**3.3 நிதியங்களின் குறைப்பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலவிய ரூபா 15,779,316 கூட்டுத்தொகையான 3 நிதியங்களுக்குரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மாணவர் மைய நடவடிக்கைகள் தொடர்பில் இந்நிதியம் பிரதானமாக பயன்படுத்தப்படுவதுடன் கடந்த வருடம் முதல் மாணவர்களின் கல்விசார் பணிகளுக்காக இணையத்தள முறைமையில் இணைந்து கொண்டமையால் எதிர்பார்த்தவாறு நிதியம் பயன்படுத்தப்படாததுடன் Glorious Sun நிதியம் மற்றும் புலமைப்பரிசில் நிதியம் 2022 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது. | குறித்த நிதியத்தை தாபிக்கும் நோக்கங்களை நிறைவேற்று வதற்கு பயன்படுத்த வேண்டும். |

**3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மொழித்திறனை அபிவிருத்தி செய்யும் மத்திய நிலையத்தின் கட்டிடத்தில் அமைந்துள்ள கணனி கூடத்திற்கு வழங்கப்பட்டிருந்த பெறுமதி இனங்காண முடியாத 37 கணனிகள் மற்றும் 47 கணனிகளுக்கான மேசைகள் மற்றும் கதிரைகள் 2019 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா 130,869 பெறுமதியான அலுவலக உபகரணங்களும் இவ்வறிக்கைத் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | கணனி இயந்திரங்களை விளைவற்று வைத்திருந்தமைக்கான காரணமாக அமைந்ததாவது இணையத்தள வசதிகளை வழங்கியிராமை ஆகும். கல்வி பிரிவு மற்றும் மொழிப் பீடத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அப்பணி நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. தற்போது வரையிலும் இணையத்தள வசதிகளை வழங்குவதற்கு கல்விக்கூடத்தின் மூலம் நடவடிக்கைகள் | சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முன்னெடுக்கப்படுகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை வரவழைப்பதற்கு நிலவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக முடியாதிருந்தது. குறித்த கதிரைகள் சிறிது நிறமிழந்தவாறு உள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்து துரித நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத்தில் ஐந்து மாடிகளை கொண்ட கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ரூபா 252,327,545 ஆன ஒப்பந்த பெறுமதியுடன் ஒரு வருடத்தில் நிறைவு செய்யும் நிபந்தகையின் கீழ் 2019 ஒக்தோபர் 02 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2019 நவம்பர் 18 ஆந் திகதி ஒப்பந்ததாரருக்கு ரூபா 14,508,834 ஆன தொழில் ஆரம்பிப்பு முற்பணமும் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. அதற்கமைய 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தனியார் ஒப்பந்ததாரர் அரசின் பணத்தை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொழும்பு மாநகர சபையில் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக நிர்மாண அனுமதிப் பத்திரம் 2021.12.03 ஆந் திகதி பல்கலைக்கழகத்திற்கு கிடைத்தது. அதற்கமைய அந்த அங்கீகாரம் கிடைத்த பின்னர் செயற்திட்டத்தின் நிர்மாண காலம் கடந்துள்ளமையால் மற்றும் நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக நிர்மாண மூலப்பொருட்களின் விலை அதிகரித்த காரணத்தினால் ஒப்பந்த நிறுவனத்தினால் நிர்மாணங்களின் விலை அதிகரித்து கோரப்பட்டுள்ளது. அதனால் அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய பதிவேடுகள் கல்வி அமைச்சின் திட்டப்பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரையிலும் குறித்த மதிப்பீடு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது. | கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு உரிய முன் ஆயத்தப் பணிகள் உரிய முறையில் திட்டமிடப்பட வேண்டும். |